துணை ஆணையாளர் முன்னிலையில் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தால் இது குறித்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : இந்த விவர அறிக்கையில் 17.3.1992 ஆம் தேதி கரூர் வட்டாட்சியர் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தையில் விசைத் தறி உரிமையாளர், பஞ்சாலை உரிமையாளர்கள் மட்டும் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வந்து இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதிலே விசைத்தறி தொழிலாளர்கள் பங்கேற்றார்களா என்பது இங்கே குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இனிமேல் எதிர்காலத்திலேயாவது இதுபோன்ற பிரச்சினைகள் எழுகின்றபோது, பஞ்சாலை உரிமையாளர்கள், விசைத் தறி உரிமையாளர்கள், அத்தோடு தொழிலாளர்களையும் சேர்த்து பேசினால்தான் நல்ல முடிவு ஏற்படும். மேலும் போடுகிற ஒப்பந்தம் வாய்மொழியாக போடப்பட்டிருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. முத்தரப்பினரை அழைத்து ஒரு ஒப்பந்தத்தை எழுத்து மூலம் போட்டால்தான் எதிர்காலத்திலே இதற்கு ஒரு நல்ல தீர்வாக இருக்கும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, எதிர் காலத்திலேயாவது இதுபோன்ற முடிவை எடுக்க அரசு முன் வருமா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்மொழியாக போடப்பட்ட அந்த ஒப்பந்தத்தை முத்தரப்பினரும் ஏற்று 2.3.1992 ஆம் தேதி முதல் விசைத் தறிகள் இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே எந்தப் பிரச்சினைகளும் அங்கே எழுப்பப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர் மற்றும் உரிமைக் குழுவின் தலைவர்.

முற்பகல் 11-05

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா' மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.